மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.182/2018

2026ம் ஆண்டு மார்ச் 09ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

09.03.2026 வா.சா.1 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. தாவா சொத்துக்களை பொறுத்து ஏழு நபர்களுக்கு பட்டா வழங்க அரசு முயற்சி செய்த போது தான் எனக்கு வழக்கு சங்கதிகள் குறித்து தெரிந்தது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தான் அதை பொறுத்து நாங்கள் மேல்முறையீடு செய்தோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் காலியிடமாக தான் உள்ளது என்றால் ஆமாம். நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் ஜாமீனுக்காக கொடுக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து அரசிடம் இருந்து எங்கள் பெயருக்கு முறையாக ஆவணங்கள் வழங்கப்பட்டதை பொறுத்து நாங்கள் நிரூபணம் செய்யும் வகையில் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் காலை எண்களாக இருந்த சமயத்தில் ஓடை புறம்போக்கு என்று தான் அரசு ஆவணங்களில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நாளது தேதி வரை அரசின் சொத்துக்களாக தான் புறம்போக்கு இருந்து வருகிறது என்றும் நாங்கள் தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டி பொய்யான ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது நிலைக்கதக்கது அல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.09 18:41:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.